



# ஹர ஹர சங்கரா

FREE COPY
Feb - 2025
Vol. 4 - ISSUE 04




# KODAMBAKKAM TIMES

# "நாராயணஸ்வாமி-யும் ந்யூமராலஜியும்"

## -- பெரியவா

பரீட்சையில் நிறைய மார்க் வாங்கினால் தான் மேலே படிக்க முடியும். இல்லையென்றால் வெறும் போஸ்ட் கிராஜீவேட் படிப்புடன் நின்றுவிட வேண்டியதுதான். "நான் எவ்வளவு முயன்றும் எண்பதுக்கு மேல் வாங்க முடியவில்லை. தொண்ணூறாவது வேணும் ந்யூமராலஜி பிரகாரம் பெயரை மாற்றி வைத்துக் கொண்டால் மார்க் நிறைய கிடைக்கும் என்றார்கள். எண் கணித ஜோதிடர் ஒருவரிடம் போனேன். நாராயணசாமி (Narayanaswami) என்ற பெயரை "Narain" என்று வைத்துக் கொள்ளச் சொல்கிறார். பெரியவா உத்திரவு கொடுத்தால் "நாரெய்ன்" என்று வைத்துக்கொள்வேன். பெரியவா சந்நிதியில் பதினைந்து பேர் நின்றுகொண்டிருந்த போது தன் விண்ணப்பத்தைச் சொல்லி முடித்தான் கல்லூரி மாணவன் ஒருவன்.



இதை சாக்காக வைத்துக்கொண்டு பெரியவாள் ஒரு சிறு சொற்பொழிவே நிகழ்த்திவிட்டார்கள்.

"நாற்பது சமஸ்காரங்களில் ஒன்று நாமகரணம். பலபேர்கள் முன்னிலையில், வேத மந்திரங்களைக் கூறி நிகழ்த்தப்படும் சடங்கு. நாமகரணம் செய்வதற்கு (பெயர் வைப்பதற்கு)த்தான் வேத மந்திரங்கள் இருக்கின்றன. நாமவிகரணத்துக்கு (பெயரை சிதைத்து மாற்றுவதற்கு) இல்லவே இல்லை.

ஸ்வாமி பெயரைத்தான் வைக்கச் சொல்லியிருக்கு "நம்பி, பிம்பி" என்று பெயர் வைத்தால் அதெல்லாம் பின்னால் காப்பாற்றாது. கண்ணன் பெயரை வையுங்கள் என்று ஓர் ஆழ்வார் பாடியிருக்கிறார்.

நாராயணசுவாமியை அவ்வளவு நீளமாகக் கூப்பிடாவிட்டாலும், நாராயணா, நாராயணா என்று அழைப்பார்கள். சுலபமா புண்ணியம் கிடைச்சிடும்.

ந்யூமராலஜி என்று சமீப காலத்தில் பிரசித்தமாக இருக்கு. ஒவ்வோர் இங்கிலீஷ் எழுத்துக்கும் நம்பர் கொடுத்து அதைக் கூட்டி நல்லது கெட்டது என்கிறார்கள். எண் கணிதப்படி பெயர் மாற்றம் செய்து கொண்டவர்களில் பலர் நல்ல பலன் கிடைத்தது என்கிறார்கள். அது போகட்டும் ந்யூமராலஜியைப் பற்றி இப்போ தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை, பையனுக்கு நிறைய மார்க் வாங்கணும் என்று கவலை அதனால் பெயரைக் கொஞ்சம் மாற்றி வைத்துக்கொண்டால் ஆதாயம் கிடைக்காதா என்று பார்க்கிறான். அந்த ஆசை சரிதான், வழி அவ்வளவு சரியில்லையோ? என்று சிந்திக்க வைக்கிறது.

கல்வி அறிவை சரஸ்வதி கடாக்ஷம் என்பார்கள். சரஸ்வதியின் அருள் இருந்தால் படிப்பு வரும், மார்க் வரும். அதற்கு என்ன செய்யணும்.

சரஸ்வதி ஸ்தோத்திரம் இருக்கு. சௌந்தர்யலஹரியிலே மூணு சுலோகம். ஸாரஸ்வத ப்ரயோகம், மேதா ஸூக்தம் என்று வேத மந்திரமே இருக்கு. குமரகுருபரரின் சகலகலாவல்லிமாலை, கம்பநாட்டாழ்வாரின் சரஸ்வதி ஸ்தோத்திரம் எல்லாம் பாராயணம் செய்யலாம்.

ஹயக்ரீவர் என்று விஷ்ணு அவதாரம். அவர்தான் சகல கலைகளுக்கும் ட்ரெஷர் ஹௌஸ் என்பார்கள். ஹயக்ரீவ ஸ்தோத்திரம், மந்திரம் இருக்கு. மேதா தக்ஷிணாமூர்த்தி மந்திரம் இருக்கு. இவைகளையெல்லாம் லட்சியம் செய்யாமல் இங்கிலீஷ் எழுத்துக் கணக்குப்படி பேர் மாற்றம் செய்து கொள்வது சாஸ்திர சம்மதமாகப் படவில்லை.

"இத்தனை விஷயங்களையும் பொதுவாகச் சொல்லிவிட்டு பின்னர் மாணவனைப் பார்த்தார்கள் பெரியவாள். அவன் கண்கள் கெஞ்சிக் கொண்டிருந்தன. தொண்டர் மூலமாகப் பிரசாதம் கொடுக்கச் சொன்னபோது மாணவன் பெயரைக் கேட்கச் சொன்னார்கள் பெரியவாள். "நாராயணஸ்வாமி" என்று கம்பீரமாகப் பதில் வந்தது.



**வாழை இலையில் அரிசியை வைத்து வரையப்பட்ட ராமர்.**



# பெருமாள் ஆலயங்களில் சக்கரத்தாழ்வாருக்கு பின்புறம் நரசிம்மர் இருப்பது ஏன்?

திருமாலின் கையிலுள்ள சக்கரத்தை சக்கரத்தாழ்வார் என்பர். திருமாலால் ஏவப்படும் ஆயுதம் இது. சக்கரத்தை வழிபட்டால் துன்பம் உடனடியாகதீரும் என்பது ஐதீகம்.

தனது பக்தனான பிரகலாதனை காக்க திருமால், நரசிம்மராக அவதரித்தார். தாயின் கருவில் இருந்து வராததாலும், கருடருடன் வராத காரணத்தாலும், இந்த அவதாரத்தை அவசர திருக்கோலம் என்பர்.

பக்த பிரகலாதனுக்காக ஓடிவந்த ஸ்ரீநரசிம்ம மூர்த்தி யோக வடிவில் சக்ரத்தாழ்வார்க்கு பின்புறத்தில் இருப்பார்.

நமக்கு ஒரு கஷ்டம் இருப்பதை சக்கரத்தாழ்வாரிடம் சொல்லிவிட்டால் போதும் அவர் வேகமாகச் சுழல்வார்.

அப்போது பின்னால் இருக்கும் நரசிம்மர் நம் முன்னே வந்து உடனடியாக குறைகளைத் தீர்ப்பதாக ஐதீகம்.

சக்கரத்தாழ்வாரை நம்பினால் சங்கடம் நீங்கி வாழ்வில் சகல நன்மையும் உண்டாகும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. நாளையென்பது நரசிம்மருக்கு கிடையாது.

துன்பத்திலிருந்து விடுபட்டு உடனடியாக நற்பலன்களை அடைய சக்கரத்தாழ்வாரையும் ஒரு சேர வழிபடுவது மிகச் சிறப்பு. இதன் அடிப்படையில்தான் பெருமாள் ஆலயங்களில் ஸ்ரீசக்கரத்தாழ்வார்க்கு பின்புறம் ஸ்ரீநரசிம்ம மூர்த்தி யோக வடிவில் இருக்கின்றார்.

# மேற்கு நோக்கிய சிவதரிசனம்

மேற்கு நோக்கிய சிவனை தரிசித்தால் ஆயிரம் கிழக்கு நோக்கிய சிவனை தரிசித்த புண்ணியம் கிடைக்கும் என்று வாமதேவர் என்ற ரிஷி தனது நூல் ஒன்றில் சொல்லியுள்ளார். கிழக்கு, மேற்கு நோக்கிய சிவலிங்கங்களின் ஆவுடையார் (கோமுகை) வடக்கு நோக்கி இருக்கும் என்பது பொதுவான விதி. ஆனால், மேற்கு நோக்கிய லிங்கத்தின் ஆவுடையாருக்கு சக்தி அதிகம். இங்கு செய்யப்படும் பரிகாரங்கள் வெகு விரைவில் பலன் தந்து கொண்டு இருக்கின்றன. மேற்குப் பார்த்த லிங்கம் உள்ள ஆலயங்கள் தோஷ நிவர்த்தி தலங்களாக விலங்குகிறது.

**சில மேற்கு நோக்கிய சிவ திருத்தல விவரங்கள்**

1. அருள்மிகு கபாலீஸ்வரர், திருமயிலை, சென்னை
2. அருள்மிகு மருந்தீஸ்வரர், திருவான்மியூர் சென்னை
3. அருள்மிகு இருதயாலீஸ்வரர், திருநின்றவூர், சென்னை
4. அருள்மிகு பாலேஸ்வரர், பாலேஸ்வரம், செங்கல்பட்டு மாவட்டம்
5. அருள்மிகு வராஹீஸ்வரர், தாமல், காஞ்சிபுரம் மாவட்டம்
6. அருள்மிகு திருமேற்றளீஸ்வரர், திருக்கச்சி மேற்றளி, காஞ்சிபுரம் மாவட்டம்
7. அருள்மிகு காசி விஸ்வநாதர், கிருஷ்ணசமுத்திரம், திருவள்ளூர் மாவட்டம்
8. அருள்மிகு ஜலநாதீஸ்வரர், தக்கோலம், வேலூர் மாவட்டம்
9. அருள்மிகு வாலீஸ்வரர், குரங்கனில்முட்டம், திருவண்ணாமலை மாவட்டம்
10. அருள்மிகு அதுல்நாதீஸ்வரர், அரகண்டநல்லூர், விழுப்புரம் மாவட்டம்
11. அருள்மிகு மருந்தீசர், திருஇடையாறு, விழுப்புரம் மாவட்டம்
12. அருள்மிகு வீரட்டீஸ்வரர், திருக்கோயிலூர், விழுப்புரம் மாவட்டம்
13. அருள்மிகு சிஷ்டகுருநாதர், திருத்துறையூர், கடலூர் மாவட்டம்
14. அருள்மிகு வைத்தியநாதீஸ்வரர், வைதீஸ்வரன்கோயில், மயிலாடுதுறை மாவட்டம்

---

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

**K K NAGAR & VADAPALANI EDITION**

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

044 2484 4114 / 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com

15. அருள்மிகு அமிர்தகடேஸ்வரர், திருக்கடையூர், நாகப்பட்டினம் மாவட்டம்
16. அருள்மிகு சுவர்ணபுரீஸ்வரர், செம்பனார்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம்
17. அருள்மிகு கடைமுடிநாதர், கீளுவையூர், நாகப்பட்டினம் மாவட்டம்
18. அருள்மிகு தர்மபுரீஸ்வரர், குருகத்தி, நாகப்பட்டினம் மாவட்டம்
19. அருள்மிகு பார்வதீஸ்வரர், திருத்தெளிச்சேரி, காரைக்கால்
20. அருள்மிகு மனுநாதேஸ்வரர், மருதவஞ்சேரி, திருவாரூர் மாவட்டம்
21. அருள்மிகு விஸ்வநாத சுவாமி, தட்டாத்தி மூலை, திருவாரூர் மாவட்டம்
22. அருள்மிகு கோணேஸ்வரர், குடவாயில், திருவாரூர் மாவட்டம்
23. அருள்மிகு அபிவிருத்தீஸ்வரர், அபிவிருத்தீஸ்வரம், திருவாரூர் மாவட்டம்
24. அருள்மிகு கண்டீஸ்வரர், திருக்கண்டியூர், தஞ்சாவூர் மாவட்டம்
25. அருள்மிகு இராமலிங்கேஸ்வரர், பாபநாசம், தஞ்சாவூர் மாவட்டம்
26. அருள்மிகு தர்மபுரீஸ்வரர், பழையாறை, தஞ்சாவூர் மாவட்டம்
27. அருள்மிகு இராமநாதசுவாமி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்
28. அருள்மிகு உக்தவேதீஸ்வரர், திருத்துருத்தி (குத்தாலம்), தஞ்சாவூர் மாவட்டம்
29. அருள்மிகு தாயுமானவசாமி, திருச்சிராப்பள்ளி
30. அருள்மிகு ஜம்புகேஸ்வரர், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி மாவட்டம்
31. அருள்மிகு கைலாசநாதர், கற்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்
32. அருள்மிகு உய்யகொண்டார், உய்யகொண்டான் திருமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்
33. அருள்மிகு வம்சோத்தாரகர், பெருங்களூர், புதுக்கோட்டை மாவட்டம்
34. அருள்மிகு காசிவிஸ்வநாதர், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்
35. அருள்மிகு மன்னீஸ்வரர், அன்னூர், கோயம்பத்தூர் மாவட்டம்
36. அருள்மிகு நீலகண்டேஸ்வரர், இருகூர், கோயம்பத்தூர் மாவட்டம்
37. அருள்மிகு திருமுருகநாதசுவாமி, திருமுருகன்பூண்டி, கோயம்பத்தூர் மாவட்டம்
38. அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர், ஐயர்மலை, கரூர் மாவட்டம்
39. அருள்மிகு விஸ்வேஸ்வரன், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம்
40. அருள்மிகு கைலாசநாதர், தாரமங்கலம், சேலம் மாவட்டம்



41. அருள்மிகு திருக்காளத்தீஸ்வரர், திருக்காளத்தி, ஆந்திரா

திருநெல்வேலி அருகிலுள்ள பத்து சிவாலயங்கள் "தச வீரட்டான ஸ்தலங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. இந்த பத்து சிவாலயங்களும் மேற்கு திசை நோக்கி அமையப்பெற்றுள்ளது சிறப்பம்சம் ஆகும். இந்த பத்து ஸ்தலங்களுள் ஒன்பது ஸ்தலங்கள் திருநெல்வேலி அருகிலும், பத்தாவது ஸ்தலமான திற்பரப்பு மகாதேவர் திருக்கோவில் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகிலும் அமையப்பெற்றுள்ளது.

**தச வீரட்டான ஸ்தலங்கள் எனப்படும் மேற்கு திசை நோக்கிய சிவாலயங்கள் :**

1. பக்தஸ்தலம் : சிவசைலம் அருள்மிகு சிவசைலப்பர் திருக்கோவில்
2. மகேசஸ்தலம் : வழுதூர் அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோவில்
3. பிராணலிங்கஸ்தலம் : கோடகநல்லூர் அருள்மிகு அவிமுக்தீஸ்வரர் திருக்கோவில்
4. ஞானலிங்கஸ்தலம் : சிங்கிகுளம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில்
5. சரணஸ்தலம் : மேலநத்தம் அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோவில்
6. சகாயஸ்தலம் : ராஜவல்லிபுரம் அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோவில்
7. பிரசாதிஸ்தலம் : தென்மலை அருள்மிகு திருப்பாத்தீஸ்வரமுடையார் திருக்கோவில்
8. கிரியாலிங்கஸ்தலம் : அங்கமங்கலம் அருள்மிகு நரசிங்கஈஸ்வரமுடையார் திருக்கோவில்
9. சம்பத்ஸ்தலம் : காயல்பட்டினம் அருள்மிகு மெய்கண்டேஸ்வரர் திருக்கோவில்
10. பஞ்சாக்ரஸ்தலம் : திற்பரப்பு அருள்மிகு மகாதேவர் திருக்கோவில்

# கோவிலுக்கு செல்வது ஏன்?

ஒரு முறை சுவாமி விவேகானந்தர் ஆன்மீக சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார் அப்போது ஒருவர் குறுக்கிட்டு "ஆண்டவனை அடைய நாம் ஏன் கோவிலுக்கு செல்லவேண்டும் அங்கு போகாமலேயே ஆண்டவனை அடைய முடியாதா" என்று கேட்டார்.

விவேகானந்தர் அவரிடம் "கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா? என்று கேட்டார். அவர் ஓடிப்போய் ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்தார்.



சுவாமி அவரிடம் "நான் தண்ணீர் தானே கேட்டேன் எதற்கு இந்த செம்பு? என்றார்.

கேள்வி கேட்டவர் குழம்பிப்போய் "செம்பில்லாமல் எப்படி தண்ணீர் கொண்டு வர முடியும்? என்று கேட்டார்.

சுவாமி அவரிடம் "ஆம் சகோதரனே தண்ணீர் கொண்டு வர சொம்பு தேவைப்படுவது போல ஆண்டவனை உணர்ந்து மகிழ ஓர் இடம் வேண்டும். அது தான் ஆலயம் அதனால் தான் கோவிலுக்கு போகச்சொல்கிறேன் என்றார்.

# இராம நாமத்தின் மகிமை

சத்ரபதி சிவாஜி, வீர சிவாஜி என்றெல்லாம் பேரும் புகழும் பெற்ற "சிவாஜி" மகாராஷ்டிரத்தை ஆண்டு கொண்டிருந்த காலம் அது. நதியில் இறங்கி சிவாஜி தன் கை, கால்களைத் தூய்மை செய்து கொண்டிருந்த போது ஆற்று நீரில் பல ஓலைச் சுவடிகள் மிதந்து வந்ததைப் பார்த்தார்.

ஓர் ஓலைச்சுவடியை எடுத்துப் பார்த்த போது, அதில் மஹாராஷ்டிர மொழியில் எழுதப்பட்டிருந்த அற்புதமான கவிதைகள் இருந்தன.

மனம் வியந்த சிவாஜி, ஓலைச் சுவடிகளை எல்லாம் எடுத்துக் கொண்டு ஆற்று நீர் வந்த திசையை நோக்கிக் குதிரையைச் செலுத்தினார்.

அங்கே ஓரிடத்தில் சிவாஜி கண்ட காட்சி அவரை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. காரணம் அங்கே மர நிழலில் ஒரு பாறையின் மீது இருந்தபடி ஒப்பற்ற ஒரு தவ சீலர் இனிய குரலில் இராம நாமத்தைப் பாடிக் கொண்டிருந்தார்.

அவரைச் சுற்றி காட்டில் இருந்த கொடிய விலங்குகள் எல்லாம் அமர்ந்திருந்தன.

அந்தக் கொடிய விலங்குகளிடம் பயப்பட வேண்டிய பசுக்களும், மான்களும் அவற்றின் அருகிலேயே எந்த விதமான பயமும் இல்லாமல் எல்லாம் ஒரே கூட்டமாக அமர்ந்து கொண்டும் ஒன்றிரண்டு சுற்றியபடியும் இருந்தன.

மறுநாளும் சிவாஜி அந்த ஞானியைத் தரிசிக்கப் போன போது ஞானி வழக்கப்படி இராம நாமத்தைப் பாடிக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றிக் கூடியிருந்த காட்டு விலங்குகள் எல்லாம் கண்களிலிருந்து நீர் வழிய அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தன.

மஹாஞானியின் வாக்கிலிருந்து வெளிப்பட்ட இராம மந்திர இசை ஓசையில் ஆற்றின் சலசலப்பும் மரங்களின் இலைகள் அசைகின்ற ஓசையும் அடங்கிப் போய்விட்டன.

அதுவரை சிவாஜி அப்படிப்பட்ட இசையைக் கேட்டதே இல்லை. அவர் தாம் ஒரு மன்னர் என்பதையே மறந்தார். அங்கிருந்த ஒரு மரத்தின் நிழலில் அப்படியே அமர்ந்து தன்னிலை மறந்தார். அது மட்டுமன்று, ஒப்பற்ற அந்த சீலரையே தம் மானசீக குருவாகவும் ஏற்கத் தொடங்கி விட்டார் சிவாஜி.

ஒரு நாள் அந்த மஹா ஞானி தனிமையில் இருந்தார். சிவாஜிக்கு மகிழ்ச்சி தாளவில்லை. அவர் உடனே ஞானியை நெருங்கி அவரது திருவடிகளில் விழுந்து வணங்கினார். "குருநாதா, அடியேனுக்கு ஞான உபதேசம் செய்யுங்கள்" என வேண்டினார்.

அப்போதுதான் அந்த ஞானியின் திருநாமம் "சமர்த்த இராமதாசர்" என்பதை

சிவாஜி அறிந்து கொண்டார். தகுதி ஊள்ளவர்கள் வந்து உபதேசம் செய்யும்படி கேட்டால் அதை மறுக்கக் கூடாது, உபதேசம் செய்ய வேண்டும். அதனால் சமர்த்த இராமதாசர் சிவாஜிக்கு இராம மந்திர உபதேசம் செய்து அவரைத் தம் சீடராக ஏற்றுக் கொண்டார்.

குருநாதரை வணங்கிய சிவாஜி அவரிடம் இராம மந்திரத்தை இனிய இசையுடன் பாடக் கற்றுக் கொண்டார்.

ஒரு நாள் சிவாஜி சிறிதளவு படையுடன் சமர்த்த இராமதாசர் தங்கியிருந்த மாவுலி என்ற நகரத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்.

அந்தத் தகவலை அறிந்த முகலாய மன்னன் ஔரங்கசீப் சிவாஜியைச் சிறைப் பிடிக்க ஒரு பெரும் படையை அனுப்பி வைத்தான்.



இரவு நேரம் நெருங்கியது பயணம் செய்து கொண்டிருந்த சிவாஜி காட்டிலேயே ஓரிடத்தில் முகாம் போட்டுத் தங்கிவிட்டுக் காலையில் பயணத்தைத் தொடரலாம் எனத் திட்டமிட்டார்.

அதன்படியே காட்டில் ஆங்காங்கு கூடாரமிட்டுப் படைவீரர்கள் தங்கினார்கள்.

சிவாஜி மட்டும் தனிமையை விரும்பிச் சற்றுத் தள்ளியே கூடாரத்தை அமைத்து அதில் தங்கியிருந்தார். சமர்த்த இராமதாசர் கற்றுக் கொடுத்த இராமநாம மந்திரத்தை அப்போது சிவாஜி இனிய இசையுடன் பாடிக் கொண்டிருந்தார். அந்த நேரம் பார்த்து ஔரங்கசீப்பின் பெரும் படை சிவாஜியையும், சிவாஜியின் படைகளையும் சுற்றி வளைத்து முற்றுகையிட்டது.

அது எதுவும் தெரியாத சிவாஜி மன்னரோ தன்னை மறந்த நிலையில் பக்திப் பரவசத்தோடு இராம மந்திரத்தைப் பாடிக் கொண்டிருந்தார். எந்த நேரமும் சிவாஜியும் அவரது படையும் கைது செய்யப்படலாம் என்ற அந்தச் சூழ்நிலையில் அந்த இரவு நேரத்தில் காட்டிலிருந்த குரங்குக் கூட்டங்கள் சிவாஜி மன்னரின் படைகளுக்கு உதவியாக முகலாயப் பெருஞ்சேனையின் மீது பாய்ந்தன.

முகலாயப் படை திகைத்தது. "இவ்வளவு பெரிய வானரக் கூட்டம் எங்கிருந்து வந்தது? என்ற அதிர்ச்சியில் முகலாயப் படை சிதறிப் போய் சின்னாபின்னமாகி ஓடியது.

சிவாஜிக்கு விவரம் தெரிந்தது. "ஆஞ்சனேயரே வந்து தம்மைக்

காப்பாற்றியிருக்கிறார் என உணர்ந்தார். அதனால் விடிந்ததும் விடியாததுமாகப் புறப்பட்ட சிவாஜி நேரே போய் சமர்த்த இராமதாசரைத் தரிசித்து வணங்கி நடந்ததையெல்லாம் அவரிடம் கூறினார்.

மஹா ஞானியான சமர்த்த இராமதாசரின் மகிமையை விளக்கும் மற்றொரு நிகழ்ச்சியும் நடந்தது. ஆனால் இது நடந்தது காட்டில் இல்லை சிவாஜி மன்னரின் அரண்மனையில்.

ஒரு சமயம் சமர்த்த இராமதாசரின் தலைமைச் சீடரான உத்தமர் என்பவர் அரண்மனை நந்தவனத்தில் இருந்த பழங்களைப் பறிப்பதற்காக சமர்த்த இராமதாசரிடம் அனுமதி கேட்டார். அதற்கு நானே பறித்துத் தருகிறேன் என்று சொல்லி கீழே கிடந்த கல்லை எடுத்துக் கனிகளின் மீது வீசினார் சமர்த்த இராமதாசர். அந்தக் கல் தவறுதலாக ஒரு பறவை மீது பட்டு பறவை துடிதுடித்துக் கீழே விழுந்து இறந்தது.

அதைப் பார்த்து அங்கிருந்தவர்கள் "இவர் பெரிய ஞானியாம், ஆனால் கல்லை எடுத்து அடித்துப் பறவையைப் பரலோகம் அனுப்பிவிட்டாரே" என்று பரவலாகப் பேசினார்கள். அதைக்கேட்ட சமர்த்த இராமதாசர் இராம மந்திரத்தின் மகிமையை விளக்கும் ஒரு பாடலை "ஜன்ஜீட்" எனும் இராகத்தில் பாடினார். பாடலைப் பாடிய படியே கீழே இறந்து கிடந்த பறவையை எடுத்து ஆகாயத்தில் வீசினார். அந்தப் பறவை உயிர் பெற்று அப்படியே பறந்து ஓடியது.

ஹிந்துஸ்தானி இராகமான "ஜன்ஜீட்" என்ற இராகத்தைப் பாடினால் எப்படிப்பட்ட நோயும் நீங்கும் என்பது இன்றும் நிலவி வரும் நம்பிக்கை.

கர்னாடக சங்கீதத்தில் அதே சாயலுடைய "செஞ்சுருட்டி" என்ற இராகம், பக்தி பாவத்துடன் பாடப்படுமானால் மனோ ரோகங்களைப் போக்க வல்லதாக இருக்கிறது.

சமர்த்த இராமதாசர் இறந்துபோன பறவையை உயிருடன் எழுப்பிய தகவல் ஊரெங்கும் பரவியது. அப்போது மாவுலி நகரத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த முகலாய மன்னனுக்கும் தகவல் தெரிந்தது.

அவன் மனைவிக்கு சித்தப் பிரமை உண்டாகியிருந்தது. அந்த முகலாய மன்னன் சமர்த்த இராமதாசரைப் பணிந்து என் மனைவியின் சித்தப் பிரமையதைத் தீர்த்து வையுங்கள் என வேண்டினான்.

சமர்த்த இராமதாசரும் மன்னனின் மனைவி முன்னால் மூன்று மணிநேரம் "மால் கவுஞ்ச்" என்ற இராகத்தில் இராம பஜனை செய்தார். மூன்றாவது மணியில் மன்னனின் மனைவி சித்தப் பிரமை நீங்கித் தெளிந்து எழுந்தாள். அவளையும் தன்னுடன் சேர்ந்து பாடச் செய்தார் சமர்த்த இராமதாசர்.

முகலாய மன்னன் மனைவி குணமாகியதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய எண்ணி சமர்த்த இராமதாசரிடம் வேண்ட. இராமதாசர் மக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும்போது "ராம், ராம்" என்று சொல்லிக் கொள்ள வேண்டும் எனக் கேட்டார். அன்று முதல் மஹாராஷ்டிர மாநிலம் மாவுலி முதலான வட தேசங்களில் மக்கள் ஒருவருக்கொருவர் "ராம், ராம்" எனச் சொல்லிக் கொண்டார்கள்.



கம்சன் தன் தங்கை தேவகிக்கு பிறக்கும் எட்டாவது குழந்தையால் தன் உயிருக்கு ஆபத்து என தெரிந்தவுடன் கணவன், மனைவி இருவரையும் சிறையில் அடைத்தான். இவர்களுக்கு குழந்தை பிறக்கும் சமயம் ஒரு கழுதையை சிறை வாசலில் கட்டி வைத்தான். சிறைக்காவலர்களை அவன் நம்பவில்லை.

கழுதைக்கு நுகரும் சக்தி மிக அதிகம் குழந்தை பிறந்ததும் கத்த துவங்கிவிடும் கம்சன் வந்து கொன்று விடுவான். இப்படி ஏழு குழந்தைகள் இறந்தன. எட்டாவது குழந்தையாக கிருஷ்ணர் பிறக்கிறார் உடனே தேவகியின் கணவன் வசுதேவன் "தயவு செய்து கத்தி விடாதே" என கழுதை காலில் விழுந்து கெஞ்சினான். கழுதையும் கத்தவில்லை. கிருஷ்ணர் அவதாரம் நிகழ்ந்தது. எனவேதான் "காரியம் ஆகனும்னா கழுதையானாலும் காலை பிடி" என்ற பழமொழி வந்தது.

கர்நாடகாவில் அமிர்தாபுரத்து அமிர்தேஷ்வரான கோவிலில் வெளிச்சுவரில் வசுதேவர் கழுதை காலில் விழும் சிற்பம் அமைந்துள்ளது.

---

**"சுற்றியுள்ள கயிற்றை அவிழ்ப்பதற்கு ஒரு வழிதான் உண்டு. எப்படிச் சுற்றினோமோ அப்படியே திருப்பி அவிழ்க்க வேண்டும். அதைப் போலவே, தவறான செயல்களை நற்செயல்களாலும், பாவங்களை புண்ணியங்களாலும்தான் போக்கிக்கொள்ள வேண்டும்.**

**தானம், தருமம், கடமை புரிதல், இறைவன் திருப்பெயரை உச்சரித்தல், ஆலய தரிசனம் ஆகிய நற்செயல்கள் பாவம் தொலைக்கும் வழிகளாகும். பாவம் நீங்கிய பிறகு ஞான மார்க்கத்தில் ஈடுபட வேண்டும். எல்லையில்லாத ஞானம், இறுதியில் ஆனந்தமாக மாறும்".**

........ மகா பெரியவா

# தை பூசப் பெருமாள்

தை பூசம் என்றவுடன் நம் நினைவிலும் மனத்திலும் நிறைபவர் ஆறு படை வீடுகளுக்கு அதிபதியான முருகப் பெருமானே ஆவார். அன்று அனைத்து முருகன் கோவில்களிலும் பல்வேறு வழிபாடுகளும், கொண்டாட்டங்களும் சிறப்பாக நடைபெறும். பக்தர்கள் தங்களுடைய வேண்டுதல்களை காவடி எடுத்தல், பால் குடம், அலகு குத்துதல், தேர் இழுத்தல் மற்றும் பாதயாத்திரை என பல வழி முறைகளில் நிறைவேற்றுவார்கள். ஆனால் முருகனின் மாமனாகிய திருமால் எழுந்தருளியுள்ள திருச்சேறை திருத்தலத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சாரநாத பெருமாள் கோவிலில் தைப் பூசத் திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது என்பது நம்மில் பலரும் அறியாத ஒன்றாகும். தைப்பூசத்தில் தேர் திருவிழா முருகன் தலங்களில் நடைபெறும். ஆனால் தைப்பூசம் அன்று பெருமாளுக்கு பிரம்மோற்சவத் தேர் நடக்கும் திவ்ய தேசம் திருச்சேறை. வரும் தைப் பூசத் திருநாளை முன்னிட்டு (11.2.25 செவ்வாய்க்கிழமை) அத்தலத்தினை பற்றி அறிந்து கொள்வோம்.



108 திவ்ய தேசங்களில் ஒன்றான திருச்சேறை திருக்கோவில் ஆயிரம் வருடங்கள் பழமையானது. பெருமாள் ஸ்ரீ சாரநாத பெருமாள், தாயார் சாரநாயகி. இக் கோவிலில் மூலவர் நின்ற கோலத்தில் கிழக்கு திசை நோக்கி சேவை சாதிக்கிறார். பெருமாள் ஐந்து தேவியருடன் ஸ்ரீதேவி, பூதேவி, மகாலட்சுமி, சாரநாயகி, நீலாதேவியுடன் காட்சி தருகிறார். இத்தலம் மார்க்கண்டேயர் முக்தி அடைந்த தலமாகும். பெருமாளுக்கு வலது புறம் மார்க்கண்டேயரும், இடது புறம் காவிரித் தாயும் அமர்ந்துள்ளனர்.

ஒரு சமயம் காவிரி, கங்கை மற்றும் பல நதிகள் கூடியிருந்த நேரத்தில் அவ்வழியே சென்ற கந்தர்வர்கள் அவர்களை பொதுவாக வணங்கிச் செல்ல அதனால் ஏற்பட்ட சண்டையிலிருந்து பிற நதிகள் விலகிச் சென்றன. பின்னர் காவிரித் தாய் கங்கைக்கு இணயாக தனக்கும் பெருமை உண்டாக வேண்டும் எனக் கேட்டு இங்குள்ள சார புஷ்கரணியின் மேற்குக் கரை ஆலமரத்தடியில் பெருமாளை நோக்கி கடும் தவம் இருக்க, அவர் தவத்தில் மகிழ்ந்த பெருமாள் குழந்தை வடிவில் காவிரித் தாயின் மடியில் தவழ்ந்தார். பின்னர் கருட வாகனத்தில் சங்கு, சக்கர தாரியாக ஐந்து தேவிகளுடன் காட்சியளித்து அருள் புரிந்தார். இதனை கண்ட காவிரி அன்னை எப்போதும் இக் கோலத்திலேயே இங்கு காட்சி கொடுக்க வேண்டும் என வேண்ட பெருமாளும் அவ்வணமே அருள் புரிந்தார். இந்த நிகழ்வு நடந்தது தைப் பூச நாளில் என்பதால் பத்து நாட்கள் கொண்டாடப்படும் தைப் பூசத்திருவிழா பிரம்மோற்சவமாக இங்கு நடக்கிறது. இத் தலத்தினை "பஞ்ச சார ஷேத்ரம்" என்றும் அழைக்கப்படுகிறது. அதற்கான காரணமானது பெருமாளின் திருநாமம் சாரநாத பெருமாள், தாயார் சார நாயகி, விமானம் சார விமானம், தீர்த்தம் சார புஷ்கரணி, தலம் திருச்சாரம் என்று ஐந்து சாரமுள்ள பொருள்கள் அமைந்ததால் "பஞ்ச சார ஷேத்ரம்" என்றும் அழைக்கிறார்கள்.

காவிரித் தாய் கண்ணனை மடியில் அணைத்த கோலத்தில் இருக்கும் கோவில் சார புஷ்கரணியின் மேற்குக் கரையில் அரச மரத்தடியில் அமைந்துள்ளது. இப் புஷ்கரணியில் நீராடி காவிரித் தாய் மற்றும் சாரநாத பெருமாளை வணங்கி வலம் வந்து தீபம் ஏற்றி வழிபட குழந்தை பாக்கியம் நிச்சயம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.



திருச்செந்தூர் முருகரின் பழமையான அபூர்வமான புகைப்படம்.

**இந்த திவ்ய தேசத்தின் பிற சிறப்புகள் என்றால் :**

1. பெருமாள் இத்திருத்தலம் தவிர தனது ஐந்து தேவிகளுடன் கருவறையில் காட்சி தருவது வேறு எந்த தலத்திலும் இல்லை.

2. இத்தலத்து மூலவர் தனது வலது கையில் பத்மம் வைத்துள்ள காட்சி பரமபதம் எனும் வைகுண்டப் பெருமான் தனது வலது கரத்தில் பத்மம் வைத்து இருப்பதற்கு ஒப்பானதாகும். அதனால் வைகுண்ட ஏகாதசி நாளில் தரிசனம் செய்வதும் மிகச் சிறப்பானதாகும்.

தைப் பூசத்தன்று மால் மருகனான முருகனை மட்டும் வழிபடாது அவரது மாமனான பெருமாளையும் வழிபட்டு சகல வளங்களையும் பெறுவோம்.

....... ஹேமலதா க்ருஷ்ணகுமார்


ASTROLOGY
VASTU CONSULTANT
PERFECT VASTU FOR HOME FACTORY OFFICE. MANY CLIENTS BENEFITTED WITH VASTU PREDICTIONS WITH US. ONLY WITH APPOINTMENT
94441 64859

# ஸ்ரீமன் நாராயணனன் மந்திரம்

**ஆர்த்தா விஷண்ணா சிதிலாச்ச பீதா**
**கோரேஷூ சவ்யாதிஷூ வர்த்தமானா**
**ஸங்கீர்த்ய நாராயண சப்தமாத்ரம்**
**விமுக்தது கா ஸூகினோ பவந்து**

கூரேசர் அருளிய நாராயணாஷ்டகம். வைகுண்டத்தில் வாசம் செய்யும் ஸ்ரீமன் நாராயணன் மந்திரம் இது.

இந்த மந்திரத்தை தினமும் காலையில் துதிப்பவர்களுக்கு மிகுந்த நன்மைகளை உண்டாக்கும்.

மாத ஏகாதசி மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசி தினத்தன்று மகாவிஷ்ணுவை மனதில் நினைத்தவாறு இந்த மந்திரத்தை 108 முறை துதிப்பதால் பிறரின் வஞ்சகத்தால் நீங்கள் இழந்த சொத்துக்கள் உங்களுக்கு திரும்ப கிடைக்கும். மனக்கவலைகள் மற்றும் நோய்கள் நீங்கும் மனோதைரியம் உண்டாகும்.

மனக்கவலை கொண்டவர்கள், துக்கத்தால் வருந்துபவர்கள், சொத்துகளை இழந்தவர்கள், பயம் கொண்டவர்கள், தீராத நோயினால் வேதனையுறுபவர்கள் என அனைவரும் "நாராயணா என்பதே இந்த மந்திரத்தின் பொதுவான பொருளாகும்.

---

# கருடனின் எட்டு நாக அணிகலன்கள்



தஞ்சாவூர் மாவட்டத்தில் நாச்சியார் கோவிலில் உள்ள கல் கருடன் நாகங்களில் முதன்மையாக திகழும் எட்டு நாகங்களை அணிகலன்களாக அணிந்து கொண்டு காட்சி தருகிறார்.

ஆதிசேஷனை கங்கணமாகவும், வாசுகியை முப்புரி நூலாகவும், தட்சகனை கச்சையாகவும், கார்கோடகனை மாலையாகவும், பத்மனை வலது காதணியாகவும், சங்கல்பனை கிரீடமாகவும், குளிகனை வலது கை வளையவாகவும், அனந்தனை வாளாகவும் கொண்டு அருள்மழை பொழிந்து வருகிறார். கல் கருடன் ஒரு வரப் பிரசாதியாக திகழ்கிறார்.

இவரை தொடர்ந்து ஏழு வியாழக்கிழமைகளில் வழிபட்டு வந்தால் சகல விதமான தோஷங்களும் நிவர்த்தியாகும் என்பது ஐதீகம்.

# KRISHNA DELISH COFFEE




## எங்களிடம் தரமான காபி கொட்டை அரைத்து தரப்படும்

## 1 கிலோ காபி பவுடர் ரூ 760 மட்டுமே

* Condition Apply

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS.15 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore
Ganapathy's
CELEBRATING
82 Years
ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
# கணபதிஸ்®
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

### பாரம்பரியமாக 1942 முதல்

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com

ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com